A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 51 / 2020</u>**

திரு. P. பழனிமுத்து,
s/o. பச்சமுத்து,
பிம்பலூர் அஞ்சல்,
வடக்கு தெரு, 1/26,
வேபபந்தட்டை தாலுக்கா,
பெரம்பலூர் மாவட்டம் – 621117.

... மேல்முறையீட்டாளர்
(திரு. P. பழனிமுத்து)

எதிர்

1. செயற்பொறியாளர்/பெரம்பலூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துரைமஙகலம் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 220.

2. உதவி செயற்பொறியாளர்/இலப்பைக்குடிகாடு,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
இலப்பைக்குடிகாடு,
பெரம்பலூர் மாவட்டம்.

3. உதவி மின் பொறியாளர்/வி. களத்தூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வி. களத்தூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுக்கா,
பெரம்பலூர் மாவட்டம் – 621 117.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு. ராஜேந்திர விஜய், செயற்பொறியாளர்/ பெரம்பலூர்
திரு. P. அருண்குமார், உதவி மின் பொறியாளர்/வி.களத்தூர்)

**<u>கேட்புரை நாள்: 23–12–2020</u>**

**<u>ஆணை நாள் : 30–03–2021</u>**

14.10.2020 அன்று பெறப்பட்ட திரு. P. பழனிமுத்து, s/o. பச்சமுத்து, பிம்பலூர் அஞ்சல், வடக்கு தெரு, 1/26, வேபபந்தட்டை தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம் – 621117 அவர்களின் 12.10.2020 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 51/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 23.12.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர் தனது கிணற்றிற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 31 வருட காலமாக காத்திருப்பதாகவும், சர்வே எண் மாற்றம் செய்து தனது பதிவின் அடிப்படையில் மீண்டும் இலவச மின்சாரம் வழஙகும்படி மேல்முறையீட்டாளர் விண்ணபித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான இரண்டு கிணற்றில் ஒரு கிணற்றிற்கு ஏற்கனவே மின் இணைப்பு பெற்றுள்ளதாகவும் மற்றொரு கிணற்றிற்கு புதிய விவசாய விண்ணப்பம் பதிவு செய்து 31 வருட காலமாக காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2.2 உதவி பொறியாளர்/V.களத்தூர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது ஏற்கனவே மின் இணைப்பு உள்ள கிணற்றின் சர்வே எண்ணை தவறுதலாக பதிவு செய்ததாகவும் இதனால் புதிய விண்ணப்பம் பெறவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 05.09.2020 அன்று அணுகியுள்ளார்.

2.3 பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 28.09.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **28.09.2020** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**<u>தீர்ப்பு</u>***

*மனுதாரர் திரு. பி.பழனிமுத்து, த/பெ. பச்சைமுத்து, பிம்பலூர் என்பவர் தனக்கு பிம்பலூர் கிராம எல்லையில் புல எண் **284/12** யில் விவசாய நிலம் உள்ளதாகவும், மேற்படி விவசாய நிலத்தில் உள்ள விவசாய மின்னிணைப்பு எண் **351–006–180** தனது தந்தையார் திரு.பச்சமுத்து பெயருக்கு வழஙகப்பட்டு தற்போது வரை அனுபவித்து வருவதாகவும், தனக்கு சொந்தமான பிம்பலூர் கிராமத்தில் உள்ள மற்றொரு புல எண் **283/5L** யிலுள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்யும் போது ஏற்கனவே மின் இணைப்பு உள்ள புல எண் **284/12** ற்கு உரிய வருவாய் ஆவணஙகளையே தனது தந்தையார் தவறுதலாக இணைத்து விண்ணப்பித்து விட்டதாக தெரிவித்தார். மேற்படி விண்ணப்பமானது பதிவு எண் **1140** நாள் **18.03.1989** எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தனது தந்தையாருக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் தவறுதலாக ஏற்கனவே மின் இணைப்பு உள்ள புல எண்ணின் வருவாய் ஆவணஙகளை இணைத்து விட்டதாகவும், தற்போது தனது தந்தையார் உயிருடன் இல்லை எனவும் தனது தகப்பனாருக்கு தான் மட்டுமே வாரிசு எனவும் குறிப்பிட்டார்.*

*மேலும் பதிவு செய்த விண்ணபத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய கடிதம் வந்ததும் மின் இணைப்பு அமைந்துள்ள நிலத்தின் புல எண் **284/12** க்குரிய வருவாய் ஆவணஙகளையே சமா்ப்பித்து தயார் நிலையை இ.கா./V.களத்தூர் பிரிவு அலுவலகத்தில் பதிவு எண் **75** நாள் **30.12.2010** என பதிவு செய்துள்ளதாகவும் மனுதாரா் தெரிவித்தார்.*

*இது குறித்து செயற்பொறியாளர்/ இ.கா./பெரம்பலூர் அவர்கள் பதில் அறிக்கையில் தற்பொழுது அளித்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் மின் இணைப்பு வழஙக நடவடிக்கை எடுக்கும் போது, வருவாய் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்ணில் **(284/12)** ஏற்கனவே மின்னிணைப்பு இருப்பது தெரியவந்துள்ளது எனவும், மேலும் ஒரே கிணறு/ ஆழ்குழாய் கிணற்றுக்கு ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் வழஙகாதிருக்கும் பொருட்டு கடித எண் SE/RE&I (D)/EE/RE/A1/F.DOC/D.986/2011(TB) dt.22.7.2011 மூலம் வழஙகப்பட்ட வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போது அக்கிணறு/ ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் விவசாய மின் இணைப்பு இல்லை எனவும் அக்கிணறு ஆழ்குழாய் கிணற்றுக்கு ஏற்கனவே தனது பெயரில் எந்த ஒரு விவசாய விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லை, பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இல்லை என்ற உறுதிமொழி பெறப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது என கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பத்தை ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் புல எண் திருத்தம் செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.*

*மேற்கண்ட உத்தரவின்படி மனுதாரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பிம்பலூர் கிராம எல்லையில் புல எண் **284/12** யிலுள்ள கிணற்றில் ஏற்கனவே மனுதாரருடைய தகப்பனார் பெயரில் விவசாய மின் இணைப்பு எண் **351–006–180** உள்ளதால், புல எண் மாற்றம் செய்து பழைய பதிவின் மூப்பு அடிப்படையில் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் மனு*

*நிராகரிக்கப்படுகிறது. எனவே, மனுதாரரின் புகார் மனுமீது நடவடிக்கை ஏதுமில்லை என இம்மன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும், ஏற்கனவே மின் இணைப்பு உள்ள கிணற்றிற்கு தயார்நிலை பதிவு செய்ததே தவறு என்பதால் அந்த தயார்நிலை பதிவு ரத்து செய்யப்பட வேண்டும் எனவும், தவறாக தயார்நிலை பதிவு செய்த அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இம்மன்றம் உத்திரவிடுகிறது. இது குறித்து விரிவான விசாரணை அறிக்கையினை இம்மன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என செயற்பொறியாளர்/இ.கா/பெரம்பலூர் அவர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது.''*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.12.2020 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. P. பழனிமுத்து அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. ராஜேந்திர விஜய், செயற்பொறியாளர்/ பெரம்பலூர் மற்றும் திரு. P. அருண்குமார், உதவி மின் பொறியாளர்/வி.களத்தூர், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதஙகள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணஙகள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:</u>

5.1 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் இரண்டு கிணறுகள் உள்ளதாகவும், அதில் உள்ள கிணறு ஒன்றுக்கு ஏற்கனவே தனது தந்தை 12–4–1988 வருடத்தில் மின் இணைப்பு வாஙகியுள்ளதாகவும் அந்த கிணற்றின் சர்வே எண் 284/12 எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 மற்றொரு கிணறான சர்வே எண் 283/5L கிணற்றிற்கு மீண்டும் புதிய விவசாய விண்ணப்பம் செய்துள்ளதாகவும் இந்த கிணற்றுக்கு 18.3.1989–ம் தேதியில் பதிவு எண் 1140 என்ற எண்ணில் வி.களத்தூர் உதவி பொறியாளர் அலுவலகத்தில் மின் இணைப்பு வாங்கிய பதிவு சர்வே எண்ணையே பதிவு செய்துள்ளதாகவும் இது தனது தந்தைக்கு எழுத படிக்க தெரியாத காரணத்தால் நடந்த தவறு என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதனால் தான் தனது இரண்டு கிணற்றுக்கும் உண்டான வி.ஓ. சான்று, சிட்டா, அடஙகள், வரைபடம், நான்கு எல்லை ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளதாகவும் தான் கடந்த 31 வருட காலமாக மின் இணைப்பு வேண்டி காத்திருப்பதாகவும் சர்வே எண் மாற்றம் செய்து தனது பதிவின் அடிப்படையில் மீண்டும் இலவச மின்சாரம் வழஙகும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>

6.1 திரு ப.பழனிமுத்து தந்தை பெயர் பச்சமுத்து, பிம்பலூர் என்பவர் தனக்கு பிம்பலூர் கிராம எல்லையில் புல எண். 284/12 யில் விவசாய நிலம் உள்ளதாகவும், மேற்படி விவசாய நிலத்தில் விவசாய மின் இணைப்பு எண் 351–006–180 தனது தந்தையார் திரு.பச்சமுத்து பெயருக்கு வழஙகப்பட்டு தற்போது வரை அனுபவித்து வருவதாகவும், தனக்கு சொந்தமான பிம்பலூர் கிராமத்தில் உள்ள மற்றொரு புல எண் 283/5L யிலுள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்யும் போது ஏற்கனவே மின் இணைப்பு உள்ள புல எண் 284/12 ற்கு உரிய வருவாய் ஆவணஙகளையே தனது தந்தையார் தவறுதலாக இணைத்து விண்ணப்பித்து விட்டதாக தெரிவித்து உள்ளார். மேற்படி விண்ணப்பமானது பதிவு எண்: 1140 நாள் 18/3/1989 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

6.2 மேலும் பதிவு செய்த விண்ணப்பத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய கடிதம் வந்ததும் மின் இணைப்பு அமைந்துள்ள நிலத்தின் புல எண் 284/12 க்குரிய வருவாய் ஆவணஙகளையே சமர்ப்பித்து தயார் நிலையை இ.கா/V. களத்தூர் பிரிவு அலுவலகத்தில் பதிவு எண் 75, நாள் 30/12/2010 என பதிவு செய்து உள்ளார்.

6.3 வருவாய் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்ணில் (284/12) ஏற்கனவே மின் இணைப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. மேலும் ஒரே கிணறு/ஆழ்குழாய் கிணற்றுக்கு ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் வழஙகாதிருக்கும் பொருட்டு கடித எண் SE/RE&I (D)/EE/RE/A1/F.DOC/986/2011 (TB) DT: 22-7-2011 மூலம் வழஙகப்பட்ட வாரிய

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போது அக்கிணறு/ ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் விவசாய மின் இணைப்பு இல்லை எனவும், அக்கிணறு ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் எந்த ஒரு விவசாய விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லை, பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இல்லை என்ற உறுதிமொழி பெறப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது என கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பத்தை ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் புல எண் திருத்தம் செய்ய இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

7.1 இருதரப்பு வாதஙகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணஙகள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான நிலத்தில் சர்வே எண் 284/12–ல் உள்ள கிணற்றுக்கு 12.04.1988–ல் மின் இணைப்பு தனது தந்தை பெற்றதாகவும், மற்றொரு சர்வே எண் 283/5L–ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி 18.03.1989–ல் பதிவு எண் 1140 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் தனது தந்தைக்கு எழுத படிக்க தெரியாத காரணத்தால் விண்ணப்பத்தில் சர்வே எண். 283/5L–க்கு பதிலாக தவறுதலாக ச.எண் 284/12 என்று மின் இணைப்பு உள்ள சர்வே எண்ணையே குறித்துவிட்டதாக தெரிவிக்கிறார். ஆகையால் சர்வே எண் மாற்றம் செய்து 18.03.1989–ல் பதிவு செய்த பதிவு எண் 1140–க்கு இலவச மின்சாரம் வழஙகும்படி வேண்டுகிறார்.

7.3 மேல்முறையீட்டாளரின் தந்தை பச்சமுத்து பிம்பலூர் கிராம எல்லையில் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி 18.03.1989–ல் பதிவு எண் 1140 ஆக பதிவு செய்துள்ளார் எனவும், மேற்படி பதிவு செய்த விண்ணப்பத்திற்கு புல எண் 284/12–க்குரிய வருவாய் ஆவணஙகளையே சமர்பித்து தயார்நிலை எண் 75 நாள் 30.12.2010 என பதிவு செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். வருவாய் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண் 284/12–ல் ஏற்கனவே மின் இணைப்பு இருப்பதாகவும், வாரிய உத்தரவின்படி ஒரே கிணறு/ஆழ்குழாய் கிணற்றுக்கு ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்பு வழஙக இயலாதெனவும், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும்போது மேற்படி கிணற்றில் ஏற்கனவே மின் இணைப்பு இல்லையென்று உறுதிமொழி பெறப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கிறார். அவ்வாறு ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது கண்டறியப்பட்டால் விண்ணப்பம்

ரத்து செய்யப்பட வேண்டுமெனவும், புல எண் திருத்தம் செய்ய இயலாது எனவும் தெரிவிக்கிறார். ஆகையால் ஏற்கனவே புல எண். 284/12–ல் மின் இணைப்பு உள்ளதால் புல எண் மாற்றம் செய்து பழைய பதிவின் மூப்பு அடிப்படையில் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டுமென எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார்.

7.4 இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய்ந்ததில் மேல்முறையீட்டாளரின் தந்தை பச்சமுத்து சர்வே எண்.284/12 –ல் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி 18.03.1989–ல் பதிவு எண் 1140 ஆக பதிவு செய்துள்ளார். அதன்பிறகு புல எண் 284/12–க்குரிய வருவாய் ஆவணங்களையே சமர்ப்பித்து 30.12.2010 அன்று தயார்நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேல்முறையீட்டாளர் பிம்பலூர் கிராமத்தில் உள்ள மற்றொரு புல எண் 283/5L யிலுள்ள கிணற்றிற்கு விண்ணப்பம் அளிப்பதற்கு பதில் ஏற்கனவே மின் இணைப்பு உள்ள புல எண் 284/12 ற்கு உரிய வருவாய் ஆவணங்களையே தனது தந்தையார் தவறுதலாக இணைத்து விண்ணப்பித்து விட்டதாக தெரிவித்து உள்ளார். இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் தந்தை 02.08.2017–ல் இறந்து விட்டார்.

7.5 அதன்பிறகு மேல்முறையீட்டாளரின் தந்தை திரு.பச்சமுத்து அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தின் பதிவு எண்.1140, நாள் 18.03.1989–ல் பெயர் மாற்றம் கோரி மேல்முறையீட்டாளரால் 29.01.2019 அன்று விண்ணப்பம் அளிக்கப்பட்டு 30.03.2019 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரிய விண்ணபத்தை ஆராய்ந்ததில் பெயர் மாற்றம் கோரிய அவருடைய கடித நாள் 29.01.2019, விவசாய மின்னிணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் அத்துடன் இணைக்கப்பட்ட சான்றாவணங்கள் ஆகிய அனைத்திலும் மின்னிணைப்பு கோரும் சர்வே எண்.284/12 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெயர் மாற்றம் கோரும் அவருடைய விண்ணபத்தில் சர்வே எண் மாற்றம் குறித்த எந்தவொரு கோரிக்கையும் வைக்கப்படவில்லை. எனவே, புல எண் 283/5L யிலுள்ள கிணற்றிற்கு பதிலாக புல எண் 284/12 ற்கு தவறாக விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக இல்லை.

7.6 மேலும், எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் வருவாய் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்ணில் (284/12) ஏற்கனவே மின் இணைப்பு இருப்பதாகவும், ஒரே கிணறு/ஆழ்குழாய் கிணற்றுக்கு ஒரே நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் வழஙகாதிருக்கும்

பொருட்டு கடித எண் SE/RE&I (D)/EE/RE/A1/F.DOC/986/2011 (TB) DT: 22-7-2011 மூலம் வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போது அக்கிணறு / ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் விவசாய மின் இணைப்பு இல்லை எனவும், அக்கிணறு /ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் எந்த ஒரு விவசாய விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லை, பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இல்லை என்ற உறுதிமொழி பெறப்பட வேண்டும் எனவும், இதன்படி ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது என கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பத்தை ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் புல எண் திருத்தம் செய்ய இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.7 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தயார் நிலை பதிவு செய்த தேதி 30.12.2010. தயார்நிலை பதிவு செய்த தேதியில் ஒரு விவசாய மின்இணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வது சம்பந்தமாக மின்சார வழஙகல் விதித்தொகுப்பு மற்றும் விவசாய பகிர்மான விதிதொகுப்பு இனஙகளில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும். விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிகளானது விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணபத்தில் உள்ள கிணற்றை மாற்றுவதற்கும் பொருந்தும் என்று மின்சார வாரியத்தலைவர் 05–12–1983ல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். மேலும், உறுப்பினர்/பகிர்மானம் அவர்கள் 28–12–1991ல் அனைத்துத் தலைமைப் பொறியாளர் பகிர்மானத்திற்கும் அனுப்பிய சுற்றறிக்கையிலும் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். எனவே, விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகள் தான் விவசாய மின்இணைப்பு விண்ணபத்தை வேறு கிணற்றிற்கு மாற்றவும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் ஆகும் என்று தெரிய வருகிறது. எனவே, எதிர்மனுதாரர் குறிப்பிடும் உரிமதாரரின் 22-7-2011 நாளிட்ட குறிப்பாணையை நான் பார்வையிட விரும்புகிறேன். அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"Lr. No. SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.986/2011, (TB), dt. 22.7.2011***

----
----

*A copy of the instruction issued vide reference is enclosed for ready reference and requested to follow the instructions thereon.*

*To avoid effecting of more than one agricultural service connection is in the name of same person in the same well/bore well and to avoid SF correction for such cases the following instructions are issued.*

*Necessary undertaking may be obtained from the applicant at the time of registering the application stating that*

*i) There is no other application registered and pending in his name for the same well/bore well and no agricultural service connection availed in the well/bore well in his name.*

*ii) If such type of cases noticed then the application is liable for cancellation and no change of well is permitted in such cases.*

*Field officials may also be instructed to inspect cases involving shifting/change of SF No. before approving the case."*

7.8 மேற்கண்ட குறிப்பாணையின்படி ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போது அக்கிணறு / ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் விவசாய மின் இணைப்பு இல்லை எனவும், அக்கிணறு / ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே தனது பெயரில் எந்த ஒரு விவசாய விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லையெனவும், பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இல்லை என்ற உறுதிமொழி பெறப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது என கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பம் ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் புல எண் திருத்தம் செய்ய இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வே எண் 284/12–ல் உள்ள கிணற்றில் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தை தன்னுடைய மற்றொரு சர்வே எண் 283/5L–ல் உள்ள கிணற்றிற்கு சர்வே எண் மாற்றம் செய்து விவசாய மின் இணைப்பு வழங்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை</u>

8.1 மேற்காணும் பத்தி 7.0–இல் உள்ள தீர்வுகளின்படி சர்வே எண் 284/12–ல் உள்ள கிணற்றில் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தை தன்னுடைய மற்றொரு சர்வே எண் 283/5L–ல் உள்ள கிணற்றிற்கு சர்வே எண் மாற்றம் செய்து விவசாய மின் இணைப்பு வழங்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 51/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. P. பழனிமுத்து,
S/O. பச்சமுத்து,
பிம்பலூர் அஞ்சல்,
வடக்கு தெரு, 1/26,
வேப்பந்தட்டை தாலுக்கா,
பெரம்பலூர் மாவட்டம் – 621117.

2) செயற்பொறியாளர்/பெரம்பலூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
துரைமஙகலம் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 220.

3) உதவி செயற்பொறியாளர்/இலப்பைக்குடிகாடு,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
இலப்பைக்குடிகாடு,
பெரம்பலூர் மாவட்டம்.

4) உதவி மின் பொறியாளர்/வி. களத்தூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வி. களத்தூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுக்கா,
பெரம்பலூர் மாவட்டம் – 621 117.

5) மேற்பார்வை பொறியாளர், – By Email
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.230, முஏ ஆட்டோ சப் ஸ்டேசன் வளாகம் பெரம்பலூர்,
நான்கு ரோடு அருகில்,
பெரம்பலூர் – 621 220.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7)) செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.